# மரம் அழுகிறது



முனைவர் அ.சஜீன்
தூத்தூர்

இந்தியாவின் கடைசி கவர்னர்-ஜெனரல்-ஆகவும், இந்திய தேசிய காங்கிரசின் தலைவராகவும், மெட்ராஸ் மாஹாணத்தின் முதலமைச்சராகவும் ஒருங்கிணைந்த இந்தியாவின் உள்த்துறை அமைச்சராகவும் பதவி வகித்தவர் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி. . ராஜாஜி என்று பெருமையாக போற்றப்படும் இவரின் '**மரம் பேசுகிறது**' என்ற கட்டுரையின் சாராம்சத்தை நினைவில் கொண்டவனாக எனது இந்த சிறு கட்டுரையை துவங்குவது சாலச்சிறந்தது என்று கருதுகிறேன். தனது நண்பரும் ஒரு மருத்துவ அதிகாரியுமான றே ஜான்சன்-உடன் மரங்களும் அவற்றின் பயன்கள் பற்றி உரையாடுவதும் அதனை அழிப்பதினால் ஏற்படும் விளைவுகள் போன்ற செய்திகள் அடங்கியவைதான் மரம் பேசுகிறது என்ற கட்டுரை. வெளியில் சென்று மரங்களுடன் பேசுவதும் கட்டித்தழுவுவதும் அவற்றுடன் அன்பான வார்த்தைகளை பரிமாறுவதும் தான் தன் நண்பரின் பொழுது போக்குகளில் ஒன்று. ஒரு நாள் திடீரென்று ஜான்சன் தனது நண்பரிடம், 'எனது உயரமானதும் அழகானதுமான பெண்ணை அநியாயமாக கொன்றுவிட்டார்கள்' என்று கூற ராஜகோபாலாச்சாரி மிகவும் கண்கலங்கினாராம். அடுத்த நாள் வெட்டப்பட்ட மரத்தின் அருகில் அவர் சென்று ஆழ்ந்த சிந்தனையில் இருந்த நேரத்தில் அவருக்கு புல்லாங்குழலின் ராகம் போன்ற மென்மையான ஒலி ஒன்று கேட்டது. அது ஒரு சோகப்பாடல். வெட்டப்பட்ட அந்த அரச மரக் கிளைகளிலிருந்து வந்தது அந்த ஒலி. 'ஏன் அந்த மரத்தை வெட்டி அந்த இடத்தில் ஒரு அரசு கட்டிடம் கட்ட ஆங்கில அரசு உத்தரவு பிறப்பித்தது?' என்ற கேள்வி அவர் உள்ளத்தை வாட்டி வதைத்துக்கொண்டிருந்தது. வெற்றி கிடைக்கும் வரை அரசாங்கத்தை எதிர்த்து போராட்டங்களை செய்து வெற்றி கண்டவர்தான் ராஜாஜி என்ற விடுதலைப்போராட்ட வீரர். மரங்களை அநியாயமாக வெட்டித்தள்ளுவது நியாயமற்ற செயல் என்பதை பத்திரிகைகளுக்கு தொடர்ந்து எழுதுவதிலும் மிகவும் உன்னிப்பாக இருந்தவர்.

**மரம் தரும் நன்மைகள்**

மரங்கள் எவ்வாறு மனிதர்களுக்கு பயனுள்ளதாக இருக்கின்றது அவற்றிற்கு மனிதர்களைப்போல் உயிரும் ஆன்மாவும் உள்ளது என்பதும் நாம் அறிந்த உண்மை. மலர்கள், காய், கனிகள் தருகிறது, நிழல், குளிர்ச்சி, மழை தருகிறது, காற்றை சுத்தப்படுத்துகிறது, நாம் வெளியிடும் கார்பன் டைஆக்சைடை கிரகித்துக் கொண்டு, நமக்குத் தேவையான ஆக்சிஜனை வெளியிடுகிறது. கார்பன் டைஆக்சைடை

கிரகித்துக் கொள்வதால் புவி வெப்பமடையும் விளைவை குறைக்கிறது. மண்ணில் வேரோடி இருப்பதால், மண் அரிப்பைத் தடுக்கிறது.

**தூத்தூரில் மரங்கள்**

பிற கிராமங்களை தொடர்படுத்தும்போது, நம் பகுதியில் மரங்கள் எண்ணிக்கை மிகவும் குறைவு. ஆங்காங்கே ஒரு சில மரங்கள். இருந்த மரங்களில் குறைந்தபட்சம் நான்கு மரங்கள் வேருடன் வீழ்தப்பட்டிருக்கின்றன. வேறு சில மரங்களின் கிளைகள் வெட்டப்பட்டிருக்கின்றன. ஒருசில பொதுமக்களில் பலரும் மரங்களால் குப்பை சேருகிறது, வீட்டை மறைக்கிறது, மரத்தின் வேர்கள் வீட்டிற்குள் நுழைகின்றது, பெயர் பலகையை மறைக்கிறது போன்ற பல காரணங்களை கூறி மரங்களை வெட்டுவதிலேயே குறியாய் இருக்கிறார்கள். அவ்வாறு வீட்டின் முன் உள்ள மரத்தை வெட்டினால் அபராதம் விதிப்பது, மின் இணைப்பு மற்றும் தண்ணீர் இணைப்பு துண்டிப்பது போன்ற தண்டனைகளும் நடைமுறையில் உள்ளன.

தூத்தூர் நேதாஜி படிப்பகத்தின் முன்னால் நின்றுகொண்டிருந்த மரங்களில் இரண்டு, இன்று கிளைகள் இழந்து மொட்டை மரங்களாக காட்சியளிக்கின்றது கிளைகள் அனைத்தும் வெட்டப்பட்டிருகின்றன. பொது இடங்களில் பொதுமக்கள் பயனடையும் வகையில் நின்றுகொண்டிருந்த மரக்கிளைகள் வெட்டப்பட்டிருக்கின்றன. காலநிலை மாறுபடும்போது அவ்வப்போது கடற்கரையும் மாய்கிறது. இதனை சமாளிக்க படிப்பக வளாகம் பயன்படுத்தப்படுகிறது. பகல் வேளைகளிலும்கூட பொழுதுபோக்க வழிதெரியாத நம் மீனவ நண்பர்கள் நிழல் தரும் மரங்கள் அடியில் இருந்து இளைப்பாறுவது வழக்கம். பத்திரிக்கைகள் வாசித்தவர்களாகவும் தொலைக்காட்சி நிகழ்வுகளை கண்டுகளித்தவர்களாகவும் இருக்கும் நம் இளைய மூத்த நண்பர்கள் அங்கே இருப்பதை பார்க்கும்போது என்ன ஆனந்தம்.

சமீபத்தில் நம் புனித தோமையார் தேவாலயத்தின் முன்புறம், வலதும் இடதுமாக நின்றுகொண்டிருந்த இரு மரங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. வழக்கமாக அவற்றுள் ஒன்றின் நிழலில் இருந்துதான் நானும் மறைக்கல்வி பயிலும் மாணவர்களுக்கு கற்று கொடுத்து வந்தேன். திடீரென பார்த்தால் அந்த மரத்தை காணோம். மரங்கள் ஏன் தூத்தூரில் வெட்டப்படுகின்றது? இயற்க்கை விரும்பிகள் இந்த கேள்விக்கு விடை தரலாம்.

தனிநபர்களால் நடப்பட்ட மரங்களா? ஊரின் நலன் கருதி, பொதுநலன் கருதி முற்போக்கு சிந்தனையாளர்களால் நடப்பட்டவைகளா?, தூத்தூரில் குறைவுபட்ட பலவற்றுள் மரங்கள் இல்லை என்ற குறையும் ஒன்றுதானே என்று கருதிய ஒரு சில மக்களால் வருடங்களுக்கு முன்னால் நடப்பட்டதுதானே இவை. கோவிலைசுற்றிலும் நிழல் தரும் மரங்களை நட்டால் கோடைகாலம் அவற்றின் நிழலில் ஓய்வெடுப்பது நலந்தானே!. கோவிலுக்குள்ளே இடம் இல்லாதபோது வெளியே மரத்தடியில் நின்று கோவில் நிகழ்வுகளில் பங்கெடுப்பதை தடுக்கும் நடவடிக்கைக்காகவா? ஒருவேளை பொது நன்மைய்க்காக வெட்டப்பட்டிருக்கலாம். காரணம் என்னவோ புரியவில்லை ஒருபுறம் ‘வீட்டுக்கு ஒரு மரம் நடுவோம்” என்ற அரசின் அறிவுரை: மறு புறம் நட்டு வளரத்த மரங்களை அழிக்கும் தீச்செயல். மரத்தில் புழுக்கள் உற்பத்தியாகின்றனவா? அதனை நிறுத்த மருந்துகள் பயன்படுத்துங்கள். ஒருசில ஊர்களில் சாலை ஓரமாய் நிற்கும் மரங்கள் எவ்வாறு அந்தந்த ஊர்களுக்கு அழகு சேர்க்கின்றன. பகல்

நேரங்களில், திருமண நேரங்களில் எத்தனை வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன? எத்தனை நபர்கள் மரத்தடியில் ஓய்வெடுக்கின்றனர்? வெப்பத்தை தணிக்க உதவுகின்றனவல்லவா? ஊரின் அழகுக்கு கழங்கமா? மரம் வளர வளர இன்னும் அதன் பயன்கள் உயரும் என்பது நாம் அறிந்த உண்மைதானே?

அரசாங்க அலுவலர்கள் கவனத்திற்க்கு கொண்டுவந்தால் அலுவலர்கள் அனுமதியின்றி மரங்கள் வெட்டுவது தவிர்கப்படும். அரசாங்கத்தால் மரங்களுக்கு எண்கள் வழங்கப்படும்.

**பொது இடங்களில் உள்ள மரங்களை வெட்டினால் யாரிடம் புகார் கொடுப்பது?**

பொது இடத்தில் உள்ள மரத்தை வெட்டினால், அந்தப் பகுதிக்கு உட்பட்ட வி.ஏ ஓ., தாசில்தார் மற்றும் காவல்நிலையத்துக்குப் புகார் கொடுக்கலாம்புகார். . .கிடைத்தவுடன், மரம் வெட்டப்படும் இடத்துக்கு இந்தத் துறைகளின் அலுவலர்கள் சென்று தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள்.

**சட்டங்கள்:**

மரம் வெட்டுவது என்பது இயற்கையை அழிக்கும் செயல். ஆகவே இதற்கு அபராதமும், சிறை தண்டனையும் உண்டு. பொது இடத்தில் மட்டுமல்ல, சொந்த நிலத்தில் நாம் வளர்க்கும் மரங்களை வெட்டுவதற்கு கூட, அனுமதி வேண்டும். குறிப்பாக, நாம் வீட்டில் வளர்க்கும் வேப்ப மரமாக இருந்தாலும்சரி வி.ஏ.ஒ-இன் அனுமதி வேண்டும். சொந்த பயன்பாட்டுக்காக ஒரு மரத்தை வெட்ட வேண்டும் என்றால், அங்கு குறைந்தபட்சம் நான்கு மரங்கள் இருந்தா ல்தான் மரம் வெட்டுவதற்கு அனுமதி வழங்கப்படும். மேலும், ஒரு மரத்தை வெட்டினால், அங்கு நான்கு மரக்கன்றுகள் நட்டு வளர்க்க வேண்டும்என்பது ... போன்ற நல்ல விஷயங்களை செயல்படுத்த அரசு உத்தரவிட்டுள்ளது . நடைமுறையில் யாரும் பின்பற்றுவதில்லை என்பதுதான் வருத்தமான .விஷயம்’

**இந்திய வனச்சட்டம் 1927**

எதற்கு எவ்வளவு அபராதம் தெரியுமா? இந்திய வனச்சட்டம் 1927 -படி யாரேனும் ஒருவர் வனத்துறையில் அனுமதியின்றி மரத்தை வெட்டினால் அவர்களுக்கு தக்க தண்டனை வழங்கப்படும் அதாவது குற்றம் சாட்டப்பட்டவருக்கு .10,000 அபராதம் அல்லது 3 மாதம் சிறை தண்டனை வழங்கப்படும். 30 ஆகஸ்ட் **2022 தந்தி டிவி**-யில் வெளியான உயர் நீதிமன்ற கிளை உத்**தரவில்** "அனுமதியின்றி மரங்களை வெட்டினால் சட்ட விரோத நடவடிக்கை" என்றும் வெளி வந்துள்ளது.

ஒவ்வொரு தலைவர்களின் பிறந்த நாளுக்கும் அரசும் கட்சிகளும் லட்சக்கணக்கான மரங்கள் நட்டதாக கூறப்படுகின்றன. சுற்றுசூழல் ஆர்வலர்களும் ஆங்காங்கே மரங்கள் நட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஜூலை 19, 2018 தினமணி பத்திரிகையின் படி 100 மரங்கள் நடப்பட்டால் 30 மரங்கள் தான் வளர்கின்றன. மீதி வேறென்னவோ காரணங்களுக்காக வெட்டப்படுகின்றன. மரங்கள் இருந்தால் தான் மழை பெய்யும்; மாசு குறையும், பூமி செழிக்கும் என்ற உண்மை எல்லோருக்கும் தெரிந்ததே. இவ்வாறிருக்க ஏன் மரங்கள் பெருமளவில் வெட்டப்படுகின்றன. எளிமையான வாழ்க்கை முறை மாறி இன்னும் வசதிகள் வேண்டும் வேண்டும் என்ற பேராசைதான் காரணம். நம் நாட்டிலும் வீட்டிலும் எந்தவொரு கட்டுமானமென்றாலும் முதலில் மரங்களை வெட்டு என்ற கண்ணோட்டத்துடன் செயல்படுகின்றனர். இது மாற வேண்டும். வெட்டியது போதும். இனியாவது இருக்கும் மரங்களை வெட்டாமல் பாதுகாப்போம்.